TNPD110013112025

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 168/2025**
**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | 14வது எதிரி கடந்த 27.12.2009ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார்.<br><br>1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13எதிரிகள் கைது செய்யப்படவில்லை. காவல் உதவி ஆய்வாளரால் நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 25.04.2017 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 02.03.2026 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் BNSS பிரிவு 359-ன் படி |

| | | | |
|---|---|---|---|
| | | | CMP.No.205/2026ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 02.03.2026ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br>அரசுத் தரப்பில் BNSS பிரிவு 348-ன் படி CMP.No.209/2026ல்தாக்கல் செய்யப்பட்ட மனு 02.03.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | (see table below) |
| 6. | பிரிவு 351(1)ஆ BNSS இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |

Item 5 details:

| **முதல் விசாரணை** | **குறுக்கு விசாரணை** |
|---|---|
| அ.சா.1- 02.03.2026 | இல்லை |
| அ.சா.2- 02.03.2026 | இல்லை |
| அ.சா.3-02.03.2026 | இல்லை |
| அ.சா.4-02.03.2026 | 02.03.2026 |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:17:14 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**

**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.

**2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07ஆம் நாள் சனிக் கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 168/2025**

**(CNR. No. TNPD11001311-2025)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.168/2025 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கந்தர்வகோட்டை காவல் நிலையம் குற்ற எண். 350/2022 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>கந்தர்வகோட்டை காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. பாஸ்கர்,<br>த/பெ. தம்புசாமி<br><br>2. **மாரியப்பன் (இறந்துவிட்டார்)**<br><br>3. பிரபு<br>த/பெ. துரைராஜ்<br><br>4. விஜயன்<br>த/பெ. துரைராஜ்<br><br>5.செந்தில், த/பெ. துரைராஜ்<br><br>6. நடேசன்<br>த/பெ. திருஞானம்<br><br>7. முத்துக்குமார்<br>த/பெ.சுப்பிரமணியன்<br><br>**8. சக்தி (இறந்துவிட்டார்)**<br><br>9. மல்லிகா<br>க/பெ. பாஸ்கர்<br><br>10. பவுன்<br>க/பெ. நடேசன் |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:17:23 +0530

| | | |
|---|---|---|
| | | 11. பரமேஸ்வரி<br>க/பெ.ஆனந்த்<br><br>**12. அம்மாக்கண்ணு (இறந்துவிட்டார்)**<br><br>13. கனகாம்பாள்<br>க/பெ.மாரியப்பன்<br><br>14. சாந்தி<br>க/பெ.முத்துகுமார்<br><br>**1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் வசிப்பது**<br>பகட்டுவான்பட்டி,<br>கந்தர்வகோட்டை தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br><br>(இவ்வழக்கின் 2 வது எதிரி மாரியப்பன், 8வது எதிரி சக்தி, 12வது எதிரி அம்மாக்கண்ணு ஆகியோர் இறந்துவிட்டதாக அரசு தரப்பில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப் போய்விட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது ) |
| 5 | சம்பவ நாள் | 27.12.2009 |
| 6 | முறையீடு | 27.12.2009 |
| 7 | கைது | 14வது எதிரி கடந்த 27.12.2009ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டுள்ளார். 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13 எதிரிகள் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர். |
| 8 | பிணையில் விடுவித்தல் | 14 வது எதிரி கடந்த 27.12.2009ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார்.<br>1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13எதிரிகள் கைது செய்யப்படவில்லை. காவல் உதவி ஆய்வாளரால் நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக குற்ற |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:17:28 +0530

| | | |
|---|---|---|
| | | இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். |
| 9 | விசாரணை துவக்கம் | 02.03.2026 |
| 10 | விசாரணை முடிவு | 02.03.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, 1வது எதிரி சட்டப்பிரிவுகள் 147, 148, 326, 427, 506(2) இதசவின் கீழும், 3, 4, 5 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 427, 506(2) இதசவின் கீழும், 6, 7 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 427, 452, 506(2) இதசவின் கீழும், 9, 10, 11, 13, 14 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 379, 427, 506(2) இதசவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>2, 8, 12 எதிரிகள் வழக்கு விசாரணையின்போது இறந்துவிட்டதால், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | காலதாமதம் இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:17:34 +0530

இவ்வழக்கு கடந்த 09.12.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 07.03.2026ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக குற்றத்துறை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.குழந்தைவேல், B.A., B.L.** அவர்களும் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 27.12.2009ம் தேதி 12.30 மணியளவில், பட்டியல் சாட்சி–1 அமுதா என்பவர் பகட்டுவான்பட்டியில் உள்ள தனது வீட்டில் தனது கணவர், குழந்தைகளுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, வீட்டின் வெளியே எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்று கூடி நின்று கொண்டு வெளியே வாடா என்று சத்தம் போட்டும், வெளியே வந்து பார்த்தபோது, எதிரிகள் அனைவரும் அரிவாள் கடப்பாரை, கட்டை ஆகியவற்றுடன் அவர்கள் வீட்டு கருங்கல் துணை அடித்தும், பட்டியல் சாட்சி–1இன் வீட்டிற்குள் நுழைந்து, 1வது எதிரி கையில் வைத்திருந்த கட்டையால் பட்டியல் சாட்சி–2இன் இடது கையில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2 முதல் 5 எதிரிகள் பட்டியல் சாட்சி–3ஐ கையால் அடித்து அவருக்கு வலது கண், வலது இடுப்பு ஆகியவற்றில் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 6, 7, 8 எதிரிகள் அனைவரும் பட்டியல் சாட்சிகள் – 1 முதல் 3 பேரையும் கையால் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 9 முதல் 14எதிரிகள் அனைவரும் பட்டியல் சாட்சி–1இன் வீட்டிலிருந்த ரூ.3000 மதிப்புள்ள பித்தளை பாத்திரங்களை எடுத்துச் சென்றும், மேற்படி எதிரிகள் அனைவரும் இந்த விசயத்தை வெளியே சொன்னால் கொலை செய்து விடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளனர். எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 326, 379, 427, 452, 506(2) இதசவின் கீழ் கந்தர்வகோட்டை காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:17:42 +0530

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகளுக்கு BNSS பிரிவு 230ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:–**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், 1வது எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 147, 148, 326, 427, 506(2) இதசவின் கீழும், 3, 4, 5 எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 427, 506(2) இதசவின் கீழும், 6, 7 எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 147, 148, 427, 452, 506(2) இதசவின் கீழும், 9, 10, 11, 13, 14 எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 147, 148, 379, 427, 506(2) இதசவின் கீழும் குற்றச்சாட்டு வனைந்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினர். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 9 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர்கள் தரப்பில் BNSS பிரிவு 359–ன் படி CMP.No.205/2026இல் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:17:49 +0530

சட்டப்பிரிவு 294(b)இன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

7. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 அமுதா என்பவர் கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–9 பிரியா என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் உதவி ஆய்வாளர் மேற்படி புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.311/2009ல், சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 324, 506(2) இதச மற்றும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொதுசொத்துக்களுக்கு சேதம் தடுத்தல் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

8. காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 27.12.2009ம் தேதி காலை 10.30 மணியளவில் சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சி–5 மணி மற்றும் பட்டியல் சாட்சி–6 கருப்பையா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.4 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சிகளாக அ.சா.2 முருகேசன், அ.சா.3 விஜயாம்பாள் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்து, எதிரிகளை தேடி வந்த நிலையில், 27.12.2009ம் தேதி மதியம் 03.00 மணியளவில் பகட்டுவான்பட்டியில் எதிரி சாந்தி என்பவரை அடையாளம் கண்டு, காரணம் கூறி, கைது செய்து உரிய நடைமுறைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற எதிரிகள் தலைமறைவாக இருந்ததால், அவர்களை கைது செய்யவில்லை.

9. பட்டியல் சாட்சி–8 மருத்துவர் செந்தில் குமார் என்பவர் வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.2 முருகேசன் மற்றும் அ.சா.3 விஜயாம்பாள் ஆகியோருக்கு சிகிச்சையளித்து அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 விபத்து பதிவேடுகள் வழங்கியுள்ளார். பட்டியல்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:17:57 +0530

சாட்சி–7 மருத்துவர் பாலசுப்பிரமணியன் என்பவர் வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.2 முருகேசன் மற்றும் அ.சா.3 விஜயாம்பாள் ஆகியோருக்கு சிகிச்சையளித்து அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8 காயச்சான்றுகள் வழங்கியுள்ளார்.

10. பின்னர் காவல் உதவி ஆய்வாளர் அ.சா.2க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கப்பட்டிருந்தததாலும், தனது புலன் விசாரணையின் அடிப்படையில், வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 148, 323, 324, 452, 506(2) இதச மற்றும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொதுசொத்துக்களுக்கு சேதம் தடுத்தல் சட்டத்திலிருந்து 147, 148, 323, 326, 379, 427, 452, 506(2) இதசவாக பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.9 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் விசாரணை முடித்து, வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 326, 379, 427, 452, 506(2) இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். அ.சா.4 மரியதாஸ் கந்தர்வகோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

11. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றனர். 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**13. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:18:07 +0530

1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகளுக்கு அளித்து 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**14. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

15. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

16. அரசு தரப்பில், கடந்த 27.12.2009ம் தேதி 12.30 மணியளவில், அ.சா.1 பகட்டுவான்பட்டியில் உள்ள தனது வீட்டில் தனது கணவர், குழந்தைகளுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, வீட்டின் வெளியே எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்று கூடி நின்று கொண்டு வெளியே வாடா என்று சத்தம் போட்டதாகவும், வெளியே வந்து பார்த்தபோது, எதிரிகள் அனைவரும் அரிவாள் கடப்பாரை, கட்டை ஆகியவற்றுடன் அவர்கள் வீட்டு கருங்கல் துணை அடித்ததாகவும், வீட்டிற்குள் நுழைந்து, 1வது எதிரி கையில் வைத்திருந்த கட்டையால் அ.சா.2இன் இடது கையில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், 2 முதல் 5 எதிரிகள் அ.சா.3ஐ கையால் அடித்து அவருக்கு வலது கண், வலது இடுப்பு ஆகியவற்றில் சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவும், 6, 7, 8 எதிரிகள் அனைவரும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை கையால் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவும், 9 முதல்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:18:14 +0530

14 எதிரிகள் அனைவரும் அ.சா.1இன் வீட்டிலிருந்த ரூ.3000 மதிப்புள்ள பித்தளை பாத்திரங்களை எடுத்துச் சென்றதாகவும், மேற்படி எதிரிகள் அனைவரும் இந்த விசயத்தை வெளியே சொன்னால் கொலை செய்து விடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்ததாகவும் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

17. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 அமுதா என்பவர் கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–9 பிரியா என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் உதவி ஆய்வாளர் மேற்படி புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.311/2009ல், சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 324, 506(2) இதச மற்றும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொதுசொத்துக்களுக்கு சேதம் தடுத்தல் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

18. வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்துள்ள அமுதா என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது புகார் மனுவில், எதிரிகள் தங்களை அசிங்கமாக பேசி, தாக்கி காயத்தை ஏற்படுத்தி, தங்களது வீட்டிலிருந்த கருங்கல் துணை அடித்து சேதப்படுத்தி, பித்தளை பாத்திரங்களை எடுத்துச் சென்றதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், நள்ளிரவு 12.30 மணியளவில் தானும், தனது கணவர் முருகேசன், தனது மாமியார் விஜயாம்பாள் ஆகியோர் தங்களது வீட்டில் இருந்த போது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர்கள், தனது வீட்டிற்குள் நுழைந்து, தங்களை தாக்கி, வீட்டில் இருந்த பொருட்களை சேதப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்துவிட்டு ஓடி விட்டதாகவும், இருட்டாக இருந்ததால், அவர்கள் யார் என்று தன்னால் அடையாளம் காண இயலவில்லை என்றும், எதிரிகள் ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர்கள் தான் அவ்வாறு செய்திருப்பார்கள் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது புகார் மனு கொடுத்து விட்டதாகவும், அதன் பின்னர் தான் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்ததாகவும், தனது புகார் மனுவிற்கும், அரசு தரப்பு வழக்கிற்கும் முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:18:22 +0530

மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், தாங்களும், எதிரிகளும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம் என்றும், இருவரும் கையொப்பம் செய்த சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், நள்ளிரவு 12.30 மணியளவில் தங்களது வீட்டில் இருந்த போது, அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர்கள், தங்களது வீட்டிற்குள் நுழைந்து, தங்களை தாக்கி, வீட்டில் இருந்த பொருட்களை சேதப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்துவிட்டு ஓடி விட்டதாகவும், இருட்டாக இருந்ததால், அவர்கள் யார் என்று தங்களால் அடையாளம் காண இயலவில்லை என்றும், எதிரிகள் ஏற்கனவே பிரச்சினை செய்திருந்ததால், அவர்கள் தான் அவ்வாறு செய்திருப்பார்கள் என சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது அ.சா.1 புகார் மனு கொடுத்து விட்டதாகவும், அதன் பின்னர் தான் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிய வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளனர். மேலும், அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது சாட்சியத்தில், தாங்களும், எதிரிகளும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம் என்றும், இருவரும் கையொப்பம் செய்த சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், எதிரிகள் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக அமைந்துள்ளது.

20. அ.சா.4 மரியதாஸ் காவல் உதவி ஆய்வாளர் வழக்கு கோப்பின் அடிப்படையில் வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், காவல் உதவி ஆய்வாளர் பிரியா என்பவர் இவ்வழக்கில் புகார் மனுவைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது குறித்தும், சாட்சிகளை விசாரித்து



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:18:32 +0530

வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும், வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. இவ்வழக்கில் எதிரிகளும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 மற்றும் வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்து, அ.சா.1 தனது புகார் மனுவிற்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் அரசுத் தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், இருதரப்பினரால் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் தங்களது சாட்சியத்தில் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் யார் என்று தங்களுக்கு அடையாளம் தெரியவில்லை என சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.4 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. எனவே இவ்வழக்கில் அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**22. முடிவாக, 1வது எதிரி சட்டப்பிரிவுகள் 147, 148, 326, 427, 506(2) இதசவின் கீழும், 3, 4, 5 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 323, 427, 506(2) இதசவின் கீழும், 6, 7 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 427, 452, 506(2) இதசவின் கீழும், 9, 10, 11, 13, 14 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 379, 427, 506(2) இதசவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13, 14 எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

**23. 2, 8, 12 எதிரிகள் வழக்கு விசாரணையின்போது இறந்துவிட்டதால், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:18:39 +0530

24. வழக்குச் சொத்து இல்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணைய பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 07.03.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:18:43 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்:-**

| **அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் விபரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. அமுதா | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. முருகேசன் | பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திருமதி. விஜயாம்பாள் | பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.4 | திரு. மரியதாஸ் | கூடுதல் சாட்சி (உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| **சான்று ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **சான்றாவணங்களின் விபரம்** | **யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.03.2026 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 02.03.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.3 | 02.03.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 02.03.2026 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 02.03.2026 | அ.சா.2க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 02.03.2026 | அ.சா.3க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | 02.03.2026 | அ.சா.2க்கு வழங்கப்பட்ட காயச்சான்று | அ.சா.4 |
| அ.சா.ஆ.8 | 02.03.2026 | அ.சா.3க்கு வழங்கப்பட்ட காயச்சான்று | அ.சா.4 |
| அ.சா.ஆ.9 | 02.03.2026 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.4 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்::–** இல்லை

**குறிப்பு:–**

1. 14வது எதிரி கடந்த 27.12.2009ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார். 1, 3 முதல் 7 மற்றும் 9 முதல் 11, 13எதிரிகள் கைது செய்யப்படவில்லை. காவல் உதவி ஆய்வாளரால் நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:18:49 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**